# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1707/16 - 2011 මැයි 25 වැනි බදාදා - 2011.05.25

*1707/16 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தவிசாளர் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், தென்னகோன் முதியன்சேலாகே சுரேந்திர பண்டார எனும் தவிசாளர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக் கட்சியைச் சேர்ந்தவரும், கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. அகுரடியகே நிமல் சந்திரசிறி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் யூ. அமரதாஸ ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அகுரடியகே நிமல் சந்திரசிறி என்பவர், கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யூ. அமரதாஸ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
*2011, மே 13.*

*6 - 181*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.